# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2398/14 - 2024 අගෝස්තු මස 21 වැනි බදාදා - 2024.08.21

*2398/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டம்***

*84 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான/ மற்றும் சபையினால் செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கழிவுநீர் அமைப்பு தொகுதிக்கு/வலையமைப்பிற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ள பாவனையாளர்களின் கழிவுநீர் அமைப்புக்குரிய கட்டணமானது 2024, ஓகத்து மாதம் 21 ஆம் திகதி முதல் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.*

*2343/29 ஆம் இலக்க மற்றும் 2023 ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் 2023, செத்தெம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் கழிவுநீர் கட்டணம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கு பதிலாக இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது.*

**ஜீவன் தொண்டமான்,**
*நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு*
*வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு*
*வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,*
*பத்தரமுல்லை,*
*2024, செத்தெம்பர் 16 ஆந் திகதி.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எந்தவொரு வளாகமாயினும் மாதாந்த கழிவுநீர் அமைப்புக் கட்டணத்துக்கு பாவனைக் கட்டணம், மாதாந்த சேவைக் கட்டணம், ஏனைய கட்டணங்கள் மற்றும் உரிய வரி தொகைகள் உள்ளடக்கப்படும். நீர்ப்பட்டியலில் பொதுவாக மொத்த மாதாந்த நீர்/ கழிவுநீர் அமைப்பு கட்டணம் சுட்டிக்காட்டப்படுவதுடன், பாவனையாளரொருவருக்கு தனது நீர்ப்பட்டியலுக்கு மேலதிகமாக பெறுமதி சேர் வரி/ இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (VAT/SVAT) விலைப்பட்டியல் (Invoice) ஒன்று தேவைப்படுமிடத்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் முன் பதிவினை மேற்கொள்வதன் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பின்வரும் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு சபையின் அனைத்து பாவனையாளர்களும் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் உரிய கட்டண விதிப்பு முறையை மிக இலகுவாக கண்டறிய முடியும்.

| பாவனையாளர் தொகுதிகள் | பாவனையாளர் வகுதி இலக்கம் மற்றும் வகுதிகள் | உரிய நீர் கட்டண விதிப்பு முறை |
|---|---|---|
| வீடு மற்றும் கூட்டுரிமை வீடுகள் | ➢ 10- வீடு<br>➢ 11- சபையின் உத்தியோகபூர்வ விடுதிகள்<br>➢ 13- அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள்<br>➢ 14- தோட்ட குடியிருப்பு (சமுர்த்தி பெறுநர்களல்லாத)<br>➢ 16- சபையின் உத்தியோகபூர்வ விடுதிகள் (அபதல)<br>➢ 17- நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தில்லாத குடியிருப்புக்களை கொண்ட கூட்டுரிமை வீடுகள்<br>➢ 18- கூட்டுரிமை வீடுகள்<br>➢ 19- தூதரக குடியிருப்பு – பெறுமதி சேர் வரி அறவிடப்படாத<br>➢ 20- வீடு சமுர்த்தி பெறுநர்கள்<br>➢ 24- தோட்டக் குடியிருப்பு சமுர்த்தி பெறுநர்கள் | கட்டண விதிப்பு அட்டவணை 01 |
| அரச நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் | ➢ 65- அரச தொழில் முயற்சி நிறுவனங்கள்<br>➢ 70- வணிக நிறுவனங்கள்<br>➢ 71- உல்லாசப் பயணிகள் ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள்<br>➢ 72- கப்பல் போக்குவரத்துச் சேவைகள்<br>➢ 77- கூட்டிணைந்த அபிவிருத்திகள்<br>➢ 78- துறைமுக நகரம்<br>➢ 79- தூதுவர் அலுவலகம் பெறுமதி சேர் வரி அறவிடப்படாத வணிக நிறுவனங்கள்<br>➢ 80- பிற வணிக மற்றும் தனியார் நிறுவனங்கள்<br>➢ 82- சபை வளாகங்கள் | கட்டண விதிப்பு அட்டவணை 02 |
| | ➢ 73- சிறிய மற்றும் நடுத்தரளவிலான கைத்தொழில் அல்லாத கைத்தொழில்கள்<br>➢ 74- முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்<br>➢ 75- சிறிய மற்றும் நடுத்தரளவிலான கைத்தொழில்கள் | |
| பாடசாலைகள், மத வழிபாட்டுத்தளங்கள் மற்றும் புனித ஸ்தானங்கள், அரச அங்கீகாரம் பெற்ற தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய இலாபம் ஈட்டாத நிறுவனங்கள் | ➢ 12- அரசாங்க பாடசாலைகள்<br>➢ 15- அரச உதவிபெறும் பாடசாலைகள்<br>➢ 81- மத வழிபாட்டுத்தளங்கள், புனித ஸ்தானங்கள்<br>➢ 85- ஏனைய இலாபம் ஈட்டாத நிறுவனங்கள்<br>➢ 88- அரச அங்கீகாரம் பெற்ற தர்ம ஸ்தாபனங்கள் | கட்டண விதிப்பு அட்டவணை 03 |
| அரச நிறுவனங்கள் | ➢ 60- அரச நிறுவனங்கள்<br>➢ 61- இராணுவ வளாகங்கள்<br>➢ 62- பொலிஸ் திணைக்களத்திற்குரிய வளாகங்கள்<br>➢ 63- அரசாங்க வைத்தியசாலைகள்<br>➢ 64- உள்ளூராட்சி நிறுவனத்திற்கு உரிய வளாகங்கள் | கட்டண விதிப்பு அட்டவணை 04 |

**கட்டண விதிப்பு அட்டவணை – I**

**நானாவித கட்டண விதிப்பு முறைகளுக்கான கழிவு நீரமைப்பு கட்டண அட்டவணை**

வீட்டு கட்டண விதிப்பு – வீட்டு நடவடிக்கைகளுக்காகவும் கூட்டுரிமை வீடுகளுக்காவும் வழங்கப்படும் கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் அறவிடப்படும் கட்டணம். (வகுதிகள் 10, 11, 13, 14, 16, 17, 18, 19, 20, 24)

| நீர் பாவனை (கன மீற்றர்) | கழிவுநீர் அமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் (ஒரு கன மீற்றருக்கு) (ரூபா) | சேவைக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 0-05 | 10.00 | 250.00 |
| 1-10 | 10.00 | 400.00 |
| 1-15 | 15.00 | 400.00 |
| 1-20 | 22.00 | 500.00 |
| 1-25 | 25.00 | 500.00 |
| 1-30 | 30.00 | 500.00 |
| 1-40 | 35.00 | 600.00 |
| 1-50 | 45.00 | 600.00 |
| 50 இற்கு மேல் | 55.00 | 900.00 |

**கட்டண விதிப்பு அட்டவணை – II**

**வணிக கட்டண விதிப்பு – வணிக நிறுவனங்கள் மற்றும் கைத்தொழிலுக்காக வழங்கப்படும்**

கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் அறவிடப்படும் கட்டணம். (வகுதிகள்: 65,70,71,72,73,74,75,77,78,79,80,82)

| நீர் பாவனை (கன மீற்றர்) | கழிவுநீர் அமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் (ஒரு கன மீற்றருக்கு) (ரூபா) | மாதாந்த சேவைக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 00 - 25 | 130.00 | 500.00 |
| 26 - 50 | 130.00 | 1,500.00 |
| 51 - 75 | 130.00 | 3,000.00 |
| 76 - 100 | 130.00 | 4,000.00 |
| 101 - 200 | 130.00 | 7,000.00 |
| 201 - 500 | 130.00 | 10,000.00 |
| 501 – 1,000 | 130.00 | 20,000.00 |
| 1,001 – 2,000 | 130.00 | 30,000.00 |
| 2,001 – 4,000 | 130.00 | 40,000.00 |
| 4,001 – 10,000 | 130.00 | 50,000.00 |
| 10,000 இற்கு மேல் | 130.00 | 60,000.00 |

## கட்டண விதிப்பு அட்டவணை III

### பாடசாலைகள், மத வழிபாட்டுத்தளங்கள் மற்றும் தர்ம ஸ்தானங்களுக்கான கட்டண விதிப்பு

*அரசாங்க பாடசாலைகள், அரச உதவி பெறும் பாடசாலைகள், மத வழிபாட்டுத்தளங்கள் மற்றும் தர்ம ஸ்தானங்கள், அரச அங்கீகாரம் பெற்ற தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய இலாபம் ஈட்டாத நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் அறவிடப்படும் கட்டணம். (வகுதிகள் 12,15,81,85,88)*

| *நீர் பாவனை (கன மீற்றர்)* | *கழிவுநீர் அமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் (ஒரு கன மீற்றருக்கு) (ரூபா)* | *சேவைக் கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| 00 - 10 | 88.00 | 500.00 |
| 11 - 15 | 88.00 | 750.00 |
| 16 - 20 | 88.00 | 1,000.00 |
| 21 - 25 | 88.00 | 1,250.00 |
| 26 - 30 | 88.00 | 1,500.00 |
| 31 - 40 | 88.00 | 1,750.00 |
| 41 - 50 | 88.00 | 2,000.00 |
| 51 - 75 | 88.00 | 2,500.00 |
| 75 இற்கு மேல் | 88.00 | 4,000.00 |

## கட்டண விதிப்பு அட்டவணை – IV

### அரச நிறுவனங்களுக்கான கட்டண விதிப்பு

*அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் அறவிடப்படும் கட்டணம். (வகுதிகள்: 60,61,62,63,64)*

| *நீர் பாவனை (கன மீற்றர்)* | *கழிவுநீர் அமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் (ஒரு கன மீற்றருக்கு) (ரூபா)* | *மாதாந்த சேவைக் கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| 00 - 25 | 120.00 | 500.00 |
| 26 - 50 | 120.00 | 1,500.00 |
| 51 - 75 | 120.00 | 3,000.00 |
| 76 - 100 | 120.00 | 4,000.00 |
| 101 - 200 | 120.00 | 7,000.00 |
| 201 - 500 | 120.00 | 10,000.00 |
| 501 – 1,000 | 120.00 | 20,000.00 |
| 1,001 – 2,000 | 120.00 | 30,000.00 |
| 2,001 – 4,000 | 120.00 | 40,000.00 |
| 4,000 இற்கு மேல் | 120.00 | 50,000.00 |

**நிபந்தனைகள்:**

1. அனைத்து நீர் மூலங்களினதும் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு குறித்த மாதத்திற்குரிய நீர் பாவனையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் மேற்கண்டவாறு கட்டணம் அறவிடப்படும்.

2. ஏதாவது குறிப்பிட்ட மாதத்தில் பாவனை பூச்சியமாக காணப்படினும் மாதாந்த கழிவுநீர் அமைப்பு சேவைக் கட்டணமானது அனைத்து வளாகங்களுக்கும் பொருந்தும்.

3. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நீர் இணைப்பிற்கு மேலதிகமாக மாற்று வழிகளில் பல்வேறு நீர் விநியோக முறைகளை பயன்படுத்துவதாயின் அதற்கான பாவனை கட்டணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் மேலதிக கட்டணத்தை பாவனையாளரகள் செலுத்துதல் வேண்டும்.

4. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நீர் வழங்கல் சேவை தவிர்ந்த கழிவுநீர் அமைப்பு சேவையை மாத்திரம் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து சபையின் அதிகாரிகள் குழு ஒன்றினால் பாவனையாளரினதும் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்படும் கள ஆய்வுக்கு பின்னர் தீர்மானிக்கப்படும் மதிப்பீட்டு தொகைக்கு அமைவாக கழிவுநீர் அமைப்பு கட்டணம் தீர்மானிக்கப்படும்.

5. கழிவுநீர் அமைப்பு கட்டணம் செலுத்துவதை புறக்கணிக்கக்கூடிய பாவனையாளர்களின் சேவை இணைப்பைத் துண்டித்தல். மாதமொன்றுக்குரிய நீர் கட்டணத்தை மற்றும் கழிவுநீர் அமைப்பு கட்டணத்தை பட்டியல் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்கு செலுத்துவதை புறக்கணிக்கக்கூடிய பாவனையாளரின் நீர் இணைப்பு மற்றும்/அல்லது கழிவுநீர் அமைப்பு சேவையை 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 88 (I) ஆம் பிரிவின் பிரகாரம் சேவை இணைப்பை துண்டிப்பதற்கு/ செயற்பாட்டினை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. கழிவுநீர் அமைப்பு சேவையின் செயற்பாடு நிறுத்தப்படுமிடத்து அதனை மீண்டும் செயற்படுத்துவதற்காக மீள் இணைப்புக் கட்டணத்திற்கு மேலதிகமாக குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கான செலவினடிப்படையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் மேலதிக கட்டணத்தை பாவனையாளர்கள் செலுத்துதல் வேண்டும்.

7. தொழிற்சாலைகளிலுள்ள வீட்டு வகுதிக்கு உட்படாத கழிவுநீரை கைத்தொழிலுக்குரிய முதலாவது சுத்திகரிப்பின் பின்னர் வீட்டு கழிவுநீர் வகையாக மாற்றுதல் வேண்டும். அது 2022, சனவரி 27 ஆந் திகதிய சுற்றாடல் சட்டத்தின் ஒழுங்குவிதி VI - A மற்றும் VI - B அட்டவணைக்கு உள்வாங்கப்பட்டுள்ள விவரக் குறிப்புகளுக்கு அல்லது சட்டத்தின் உரிய ஏற்பாடுகளின் கீழ் அல்லது பின்னர் மேற்கொள்ளப்படும் பிறிதொரு திருத்தமொன்று காணப்படுமிடத்து குறித்த திருத்தங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

8. கட்டளையை மீறுதல்:
கழிவு நீரமைப்பு சேவை வழங்கப்படுவது சில கட்டளைகளுக்கு ஏற்பவாகும். அக்கட்டளைகளை யாராவதொரு பாவனையாளர் மீறுவாராயின் 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தினதும், 1992 ஆம் ஆண்டின் 13 இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் உரிய ஏற்பாடுகளின் கீழ் அல்லது இச்சட்டங்களின் ஏனைய தொடர்புடைய திருத்தங்களினது ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

EOG 08 - 239/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.